திரு. பெ. சௌந்தரபாண்டியன் : துவங்கப்படுகின்ற இந்த சர்க்கரை ஆலைகளில் ஒரு நாளைக்கு எவ்வளவு டன் கரும்பு அரைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது ? இப்பொழுது இருக்கிற கரும்பு ஆலைகளெல்லாம் குறைந்த திறன் உள்ளதாக இருக்கின்றன. இனிமேல் துவங்கப்பட இருக்கிற ஆலைகள் கூடுதல் திறன் உள்ளதாகச் செய்வதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதல் கட்டமாக 1,200 டன் என்று தொடங்குகிறோம். படிப்படியாக 4,000 டன் வரை பெரும்பாலும் போக முடியும்.

(முற்பகல் 9–30)

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, புதிதாகத் தொடங்கப்படுகின்ற 8 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை அமைக்கின்றபோது வடாற்காடு மாவட்டத்தில் அமைப்பது பற்றியும் பரிசீலனை செய்யலாம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் உற்பத்தியாகின்ற கரும்பின் அளவைப் பார்க்கும்போது, அங்கே இன்னும் 7, 8 சர்க்கரை ஆலைகளைத் தொடங்கலாம். இப்போது நம்முடைய அரசு ஜாயின்ட் செக்டாரில் தொழில்களைத் தொடங்குவதில் நாட்டம் செலுத்தி வருகிறது. ஆகவே வடாற்காடு மாவட்டத்தில் ஜாயின்ட் செக்டாரில் ஒன்று அல்லது இரண்டு சர்க்கரை ஆலைகளைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வடாற்காடு மாவட்டத்தில் ஏராளமான கரும்பு உற்பத்தியாவதால்தான் அங்கே பல சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. புதிதாக 8 சர்க்கரை ஆலைகளை அமைக்கும்போது அங்கே அமைப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட இருக்கிறது. ஜாயின்ட் செக்டாரைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறையிலே ஷேர் காப்பிட்டல் சேர்ப்பது கஷ்டமாக இருப்பதால் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், கரும்பு உற்பத்தியாளர்களை பங்குதாரர்களாகச் சேர்த்து, அரசாங்கமே ஒரு கம்பெனியைத் தொடங்கினால் ஏராளமான பணவசதி உடனடியாக கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதுபற்றிய பரிசீலனை அரசிடம் இருக்கிறது. அதற்கு ஷுகர் கார்ப்பரேஷன் நிறுவப்பட இருக்கிறது.

Mulberry plantations

* 504 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state —

(*a*) whether the Government have taken any steps to raise large number of mulberry plantations ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 651–652-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 மார்ச் 19]

திரு. என். டெண்ணிஸ் : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களைத் தவிர, வேறு இடங்களில் பயிரிடவும் பண்ணைகள் அமைக்கவும் வசதி இருக்கிறதா ? மேலும் பல பண்ணைகளைத் தொடங்கினால் வேலையில்லாமல் இருக்கின்ற கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வசதி இருக்கிறது. ஆகவே, இத்திட்டத்தை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தர்மபுரி மாவட்டம் முசுக்கட்டை மரத் தோட்டங்களை வளர்க்கப் போதுமான தட்ப வெப்ப நிலை உடையதாக இருக்கிறது என்ற எண்ணம் இதுவரையில் இருந்துவந்தது. இப்போது இந்த மரங்கள் காஞ்சிபுரத்தில் கூட நல்ல முறையில் உற்பத்தியாகின்றன. ஆகவே, காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், முதலிய இடங்களில் பட்டுத் தொழில் தொடங்கலாமா என்பது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்தப் பண்ணைகளில் நிர்வாகச் செலவு கூடுதலாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா ? நிர்வாகச் செலவு மொத்தம் எவ்வளவு ஆகிறது என்ற விபரத்தை தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ.மாதவன் : அதுபற்றிய விபரம் இல்லை. ஆனால், பண்ணைகளைப் பொறுத்தவரையில் மிக விரைவில் அதிக லாபம் என்று தெரிகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, பட்டு உற்பத்தியைப் பொறுத்தவரையில் அதிகமாகத் தண்ணீர் தேவையில்லை. பாரின் எக்சேஞ்ச் ஏர்ன் பண்ணக்கூடியது பட்டு. இப்போது கோவை மாவட்டத்தில் கோவை தாலுக்காவிலும், பல்லடம் தாலுக்காவிலும் இத்தொழில் பெருமளவில் நடைபெறுகின்றது. ஆனால் மைசூரில் கொண்டுபோய் விற்பனை செய்கிறார்கள். அங்கே உற்பத்தியாகின்ற பட்டு தரத்திலும் உயர்ந்ததாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்தத் தாலுக்காக்களில் கச்சா நூல் உற்பத்தியைப் பெருக்கும் தொழிற்சாலைகளை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமக்கே பற்றாக்குறை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது எப்படி நடைபெறுகிறது என்று தெரியவில்லை. மல்பரி தோட்டங்களை வசதியான இடங்களில் ஆங்காங்கே அமைத்து, பண்ணைகள் அமைத்து, நூல் நூற்று விற்கக்கூடிய முறை பரிசீலிக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் சொன்ன இடங்களில் இத்தொழிலை ஆரம்பிப்பது பற்றி நிச்சயமாக கவனிக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : It is seen from the answer placed on the table of the House that a crash programme has been proposed to be started in Dharmapuri district. May I know from the Hon. Minister when that crash programme will be implemented in Dharmapuri district and whether the Government of India has sanctioned it ? The best variety, it has been mentioned, is Mysore variety. Will that be introduced in this crash programme ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில்க் போர்டுக்கு நம்முடைய திட்டத்தை அனுப்பியிருக்கிறோம். இன்னும் அனுமதி வரவில்லை. வந்தவுடன் பரிசீலிக்கப்படும்.

திரு. எம்.ஏ. லத்தீப் : இந்த பட்டு உற்பத்திக்கு காஞ்சீபுரம், ஆரணி, கும்கோபணம் முதலிய இடங்களிலும் தட்ப வெட்ப நிலை சரியாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏலகிரி மலையிலும், ஜவ்வாது மலையிலும் பட்டு உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று ஏற்கனவே மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரையை அரசு ஆராய்ந்ததா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி பரிந்துரை இருக்குமானால் நிச்சயம் பரிசீலிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், அரசாங்கத்தினால் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட பட்டுப்பூச்சிப் பண்ணை நஷ்டத்தில் நடப்பதாக அறிக்கை சொல்கிறது. அந்தப் பண்ணை நஷ்டத்தில் இல்லாமல் லாபத்தில் நடக்க என்ன சீரமைப்பு வேலைகளை அரசாங்கம் செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதன் முதலாகத் தொடங்கப் பட்டவுடன் லாபம் வருமென்று எதிர்பார்க்க முடியாது. இந்தச் செடி வளர்ந்து பல்லாண்டுகளுக்குப் பலன் தருகிறது. ஆகவே, முதலில் நஷ்டம் வந்தாலும் போகப்போக லாபம் வரும் என்ற குறிப்புத்தான் இருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள மசினகுடி சில்க் ஃபார்ம் சரியாக இயங்கவில்லை என்று தெரிகிறது. இத்தொழிலுக்கு ஏற்ற வசதிகள் இருந்தும் ஏன் சரியாக இயங்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தனி கேள்விப் போடவும்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே கடந்த சட்டசபைக் கூட்டத்திலே ஒரு உப கேள்விக்குப் பதில் சொல்லும்போது பட்டுப்பூச்சி வளர்க்கும் பண்ணைகளை நிறுவ எங்கெங்கே வசதி இருக்கிறது என்பதை கண்டறிய ஒரு போர்டு நியமிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த போர்டு ஏற்படுத்தப்பட்டுவிட்டதா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : போர்டு நாம் அமைப்பதல்ல. சில்க் போர்டில் நாம் பல கோடி ரூபாய்க்கான திட்டங்கள் அனுப்பி யிருக்கிறோம். அங்கிருந்து அனுமதி கிடைத்த பின்னால் பரிசீலனைச் செய்யப்படும்.